# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஜாதிக உருமய நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998, ஓகத்து மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

1998, ஓகத்து மாதம் 14 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 6.50 தபாற் செலவு : ரூபா 2.50

நிறுவனத்தினால் செலுத்தப்படற்பாலனவும், நிறுவனத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

**8.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான நிறுவனத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று நிறுவனத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது செலுத்தப்படற்பாலதான சந்தாப் பணங்களும் அதிகப்படியான பணங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படலாம்.

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் செயலாளர் முன்னிலையிலன்றி எச்சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது, அத்துடன் தலைவர், செயலாளர் ஆகியவர்கள், அவர்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதனின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**10.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாக கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டத்தில் முறைப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம், அவர்களில் இருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1998 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஜாதிக உருமய நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஓகத்து மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ. 3/93

## ஜாதிக உருமய நிறுவனத்தினைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

"ஜாதிக உருமய நிறுவனம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் தாபிக்கப்பட்டிருப்பதாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும், இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும்: அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஜாதிக உருமய நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த ஜாதிக உருமய நிறுவனத்தின் (இதனத்துப் பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளும் அதன்கீழ் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் "ஜாதிக உருமய நிறுவனம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும் ; அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும். ஜாதிக உருமய நிறுவனத்தினைக் கூட்டிணைத்தல்.

2 — டீ 041805 — 1,100 (96 /09)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள் கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, அத்துடன் ஐக்கியத்தைப் பாதுகாத்தல் ;

(ஆ) இலங்கைவாழ் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தல், வளர்த்தல், பரவச் செய்தலும் அத்துடன் பேணுதல் ;

(இ) ஜாதி, மத, சமூக ஒற்றுமையைப் பேணி, சமூக பேதங்களை அறவே ஒழித்தல் ;

(ஈ) பயங்கரவாத அனர்த்தங்களினால் பாதிக்கப் பட்டோருக்கு உதவி வழங்குதல் ;

(உ) பௌத்தர்களின் உரிமைகளைப் பெற்றுப் பாதுகாத்து மேம்படுத்துவதோடு மற்றும் சமயத்தவரோடு இணைந்து வாழ்தல் ;

(ஊ) தேசத்தின் தனித்தன்மையைப் பாதுகாப்பதற்கு வேண்டியதுமான பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(எ) தேசிய, பண்பாட்டு, சமூக மற்றும் சூழல் மரபுகளைப் பேணிப் பாதுகாத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங் கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தி னதும் ஏற்பாடுகளுக்கமையக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் வங்கிக் கணக்கு களைத் தொடங்கவும் நடாத்தவும் முடிவுறுத்தவும் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணம் கடன் வாங்கவும் அல்லது பணத்தைத் திரட்டவும் மானியக்கொடை களையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் தேவையான ஆளணி யினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களுட்படக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவைகளில் ஏதேனும் ஒன்றைச் சீர்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்து வதற்குத் தேவையான அல்லது தகுந்த எந்த வகையிலேனும், எல்லாக் காரியங்களையும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் அத்துடன் செயல்படுத்துவதற்குமான தத்துவமும் கூட்டுத்தாப னத்திறகுச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் நிருவாகக் கருமங்கள், தலைவர், உபதலைவர்கள், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படவேண்டிய ஆறு பேருக்குக் குறையாத எண்ணிக்கையானோரைக் கொண்ட முகாமைச் சபையொன்றின் மூலம் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைய நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிறுவனத்தின் முகாமைச் சபை இக்கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) ஏதேனும் பொதுக் கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமான அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும் :–

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் ;

(இ) முகாமைச் சபையைத் தெரிவு செய்தல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களை, முகவர்களை அத்துடன் சேவையாளர்களைத் தெரிவு செய்தல் அத்துடன் அவர்களின் தத்துவங்களும், கடமைகள் மற்றும் பணிகள் ;

(உ) முகாமைச் சபையின் குழுவின் கூட்டங்களிற் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அவற்றின் கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்திலான உறுப்பாண்மைக்கான தகைமைகள் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிர்வகித்தலும் முகாமை செய்தலும் ; அத்துடன்

(ஏ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று வலுவிலுருக்கும் கூட்டுத்தாபன விதிகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளோடு ஒவ்வாதனவாக இல்லாதிருக்கும் அளவுக்குக் கூட்டுத்தானத்தின் விதிகளாகக் கருத்துப்படுதல் வேண்டுமென்பதுடன் அதே போன்ற ஒரு கூட்டத்திலும் அதே முறையிலும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியைப் போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் நிதிகள் –

(அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிறுவனத்தின் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவை இத்திகதியிலிருந்து கூட்டுத்தாபனத்துக்குக் கைமாறப்பட்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்குப் பின்னர் கூட்டுத்தாபனத்துக்கு வந்துறக்கூடிய எல்லாப் பணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம், இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் கூறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**8.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான நிறுவனத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக் களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பது டன் அந்நாளன்று நிறுவனத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது செலுத்தப்படற்பாலதான சந்தாப் பணங்களும் அதிகப்படியான பணங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். நிறுவனத்தினால் செலுத்தப்படற் பாலனவும், நிறுவனத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான கடன்கள்.

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாப னத்தின் தலைவர் மற்றும் செயலாளர் முன்னிலையிலன்றி எச்சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது. அத்துடன் தலைவர், செயலாளர் ஆகியவர்கள், அவர்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அச்சானத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதனின்றும் தனிவேறானதாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படலாம்.

**10.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாக கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப் படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டத்தில் முறைப்படி இயலு மானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாப னத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம், அவர்களில் இருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது. குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.